JK Fenner

பாதுகாப்பான எதிர்காலத்தை படைப்பது ஜே.கே.ஃபென்னர்

ஜே. கே. ஃபென்னர் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம் : 3. மதுரை - மேலக்கால் ரோடு, மதுரை - 625 016, தமிழ்நாடு
நிர்வாக அலுவலகம் : கிவ்ராஜ் காம்பளக்ஸ் - II, 5வது தளம், 480, அண்ணாசாலை, நந்தனம், சென்னை - 600 035.
இமெயில் : fd@jkfenner.com; இணையதளம் : www.jkfennerindia.com; **CIN : U24231TN1992PLC062306**
தொலைபேசி : 0452-4283822 / 4283826, தொலை நகல் : 0452-4283831

CREDIT RATING
CRISIL Limited
FAA - / Stable

டெபாசிட்டுகள் ஏற்பு

காலவைப்பு டெபாசிட் (காலாண்டுக்கான வட்டி வழங்குதல்)		
காலம்	வருட வட்டி விகிதம்	குறைந்தபட்ச டெபாசிட் தொகை
1 வருடம்	8.00%	ரூ 25,000
2 வருடங்கள்	8.25%	ரூ 25,000
3 வருடங்கள்	8.35%	ரூ 25,000

மூத்த குடிமக்கள் (60 வயதுக்கு மேல்), ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் ரூ.5 லட்சம் மற்றும் அதற்கு மேலாக டெபாசிட் செய்பவர்களுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (அதிகபட்சம் 0.50% வருடத்திற்கு)

படிவம் DPT-1

டெபாசிட்டுகளை வரவேற்கும் விளம்பர வடிவிலான சுற்றறிக்கை

(2014-ம் வருடத்தைய கம்பெனிகள் (டெபாசிட்டுகள் ஏற்பு) விதிகள்,பிரிவு 73(2)(a), பிரிவு 76
மற்றும் விதி 4(1) மற்றும் 4(2)ன் படி)

1. பொதுவான தகவல்கள்

அ) கம்பெனியின் பெயர், முகவரி, இணையதளம் மற்றும் இதர தொடர்புகளுக்கான தகவல்கள் :
ஜே.கே.ஃபென்னர் (இந்தியா) லிமிடெட். 3, மதுரை- மேலக்கால் ரோடு, மதுரை - 625 016, தமிழ்நாடு
இமெயில் : fd@jkfenner.com, இணையதளம் : www.jkfennerindia.com
தொலைபேசி : 0452-4283822 / 4283826 தொலைநகல் : 0452-4283831

ஆ) கம்பெனி நிறுவப்பட்ட தேதி : கம்பெனி 09.04.1992ம் தேதி தனியார் கம்பெனியாக நிறுவப்பட்டது. பின்னர் 22 .04.1997ம் தேதி பொது கம்பெனியாக மாற்றப்பட்டது.

இ) கம்பெனி நடத்தும் தொழில்கள், நிர்வகிக்கும் துணை நிறுவனங்கள், கிளைகள் அல்லது உற்பத்தி ஆலைகள் பற்றிய விவரங்கள் :

கம்பெனி நடத்தும் தொழில்கள் : இந்த கம்பெனி, பவர் டிரான்ஸ்மிஷன் பெல்ட்டுகள், ஆயில்சீல்ஸ் மற்றும் மோல்டட் ரப்பர் பொருள்களை உற்பத்தி செய்து விற்பது, பவர் டிரான்ஸ்மிஷன் டிரைவ்களை வடிவமைத்தல், விநியோகித்தல் மற்றும் நிறுவும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

துணை நிறுவனங்கள் : இந்த கம்பெனியிக்கு ஐந்து துணை நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் பெயர்களும், தொழில்களும் வருமாறு :

1) அகார்ன் இன்ஜினியரிங் லிமிடெட் - பொறியியல் பொருட்களை தயாரித்தல்.
2) சதர்ன் ஸ்பின்னர்ஸ் அண்டு பிராஸசர்ஸ் லிமிடெட் - பருத்தி நூல், பருத்தி துணி தயாரிப்பு மற்றும் விற்பனை.
3) மாடர்ன் காட்டன் யார்ன் ஸ்பின்னர்ஸ் லிமிடெட் பருத்திநூல், பருத்தி துணி தயாரிப்பு மற்றும் விற்பனை.
4) பிஎம்எப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட் - முதலீட்டு தொழில்
5) திவ்யஸ்ரீ கம்பெனி பிரைவேட் லிமிடெட், - பொது வணிகம், வர்த்தகம், கமிஷன் முகவர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள்.

கிளைகள் மற்றும் உற்பத்தி ஆலைகள் : கம்பெனி தனது உற்பத்தி ஆலைகளை மதுரை, நிலக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், பட்டான்சேரு மற்றும் பாசமைலாரம் ஆகிய இடங்களில் அமைத்துள்ளது. இதன் விற்பனை அலுவலகங்கள் அகமதாபாத், பெங்களூர், சென்னை, இந்தூர், ஜெய்பூர், கான்பூர், கொச்சி, கொல்கத்தா, லூதியானா, மதுரை, மும்பை, புதுடில்லி மற்றும் ஹைதராபாத்தில் அமைந்துள்ளன.

டெபாசிட்டுகள், கம்பெனியின் கீழ்கண்ட அலுவலகங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்:

அகமதாபாத் : 602, வால் தெரு அனைக்ஸ், ஓரியண்ட் கிளப் எதிரில், குஜராத் காலேஜ் கிராஸிங் அருகில், எல்லிஸ் பாலம், அகமதாபாத் - 380 006
தொலைபேசி : 079-26408572/ 2640 8573

சென்னை : கிவ்ராஜ் காம்பளக்ஸ்-II, 5வது தளம், 480, அண்ணா சாலை,
நந்தனம், சென்னை- 600 035.
தொலைபேசி : 044-4399 4600/4399 4666

மதுரை : 3, மதுரை-மேலக்கால் ரோடு, கோச்சடை, மதுரை-625 016.
தொலைபேசி : 0452 - 4283822/ 4283826

நவி மும்பை : 105, கௌரி காம்பளக்ஸ், செக்டார் - 11, CBD பேலாபூர்,
நவி மும்பை - 400 614. தொலைபேசி 022 - 2756 0985, 2758 0236.

ஹைதராபாத் : பிளாட் நிர்.35, T.I.E பாலாநகர் ஹைதராபாத் - 500 037.
தொலைபேசி: 040-2307 1126, / 23071139.

கொல்கத்தா : D10, மெர்லின் மேட்ரிக்ஸ், அலகு நிர்.605, 6வது தளம், செக்டார்-V,
சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா 700 091.
தொலைபேசி: 033-66168861.

புதுடெல்லி : டிலைட் தியேட்டர் கட்டிடம், 2வது மாடி, ஆசப் அலி ரோடு,
புதுடெல்லி - 110 002. தொலைபேசி : 011-2324 3113 / 2324 3153.

ஈ) கம்பெனி நிர்வாகம் பற்றிய குறிப்பு :

இந்த கம்பெனி, இயக்குநர்கள் குழுவின் மேற்பார்வைக்குட்பட்டு, அதன் வழிகாட்டுதல்களோடு, அதன் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர் & இயக்குநரால் நிர்வகிக்கப்படுகிறது.

உ) இயக்குநர்களின் பெயர்கள், முகவரி, DIN மற்றும் தொழில் விவரங்கள் :

	இயக்குநர்களின் பெயர்	**முகவரி**	**DIN**	**தொழில்**
1.	டாக்டர் ரகுபதி சிங்கானியா-சேர்மன்	பேட்ரியாட் ஹவுஸ், 3, பகதூர்ஷா ஜாபர் மார்க், புது டில்லி - 110 002.	00036129	தொழிலதிபர்
2.	திரு.எச்.வி.லோதா	14, கவர்மெண்ட் பிளேஸ் ஈஸ்ட், கொல்கத்தா - 700 069.	00394094	பட்டய கணக்காளர்
3.	திரு. ஹர்ஷ்பதி சிங்கானியா	நேரு ஹவுஸ், 4 பகதூர்ஷா ஜாபர் மார்க், புதுடெல்லி - 110 002.	00086742	தொழிலதிபர்
4.	திரு.ராகுல் சி. கிர்லோஸ்கர்	லகாகி காம்பவுண்ட், மாடல் காலனி, சிவாஜி நகர், பூனே - 411 016.	00007319	தொழிலதிபர்
5.	திரு. பகுல் ஜெயின்	நிர்மல் 3வது மாடி, நரிமான் பாயிண்ட் மும்பை - 400 021.	00380256	தொழிலதிபர்
6.	திருமதி. மம்தா சிங்கானியா	நேரு ஹவுஸ், 4, பகதூர்ஷா ஜாபர் மார்க், புது டில்லி - 110 002.	01667668	தொழிலதிபர்
7.	திரு. சுரேந்திர மல்ஹோத்ரா	பேட்ரியாட் ஹவுஸ், 3, பகதூர்ஷா ஜாபர் மார்க், புது டில்லி - 110 002.	00271508	கம்பெனி அலுவலர்
8.	திரு. விக்ரம்பதி சிங்கானியா நிர்வாக இயக்குநர்	பேட்ரியாட் ஹவுஸ், 3, பகதூர்ஷா ஜாபர் மார்க், புது டில்லி - 110 002.	00040659	தொழிலதிபர்
9.	திரு. நாகராஜ்[6] ஸ்ரீராமா தலைவர் & இயக்குநர்	கிவ்ராஜ் காம்பளக்ஸ் - II, 5வது தளம், 480, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600 035.	02473218	கம்பெனி அலுவலர்

ஊ. மேலாண்மை எதிர்கொள்ளும் இடர் காரணிகள் :

கம்பெனியின், பவர் டிரான்ஸ்மிஷன் பெல்ட்டுகள்,ஆயில்சீல்ஸ் மற்றும் மோல்டட் ரப்பர் பொருள்களுக்கு இருக்கும் தேவை என்பது புறக்காரணிகளான நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆட்டோமொபைல் துறை வளர்ச்சியை பொறுத்து அமையும். ஆட்டோமொபைல் தொழில் முழுவதும் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்திருப்பதாகும். பொருளாதார நடவடிக்கையில் ஏதேனும் தொய்வு ஏற்பட்டால் அது கம்பெனியைப் பாதிக்கும். அரசின் பொதுவான பொருளாதாரக் கொள்கைகள் கம்பெனியின் தயாரிப்புகளுக்கு இருக்கும் தேவை மீது தாக்கத்தை ஏற்படுத்தும். அது இலாபத்திலும் பிரதிபலிக்கும்.

எ. டெபாசிட்டுகளை திருப்பி கொடுக்கத் தவறிய விவரங்கள், தொகைகள், தவறிய காலம் மற்றும் நடப்பு நிலை-

1) சட்டபூர்வமான நிலுவை: ஏதுவும் இல்லை. சட்ட வழக்கில் இல்லாத சட்டபூர்வமான நிலுவைகளை உரிய அதிகார அமைப்பிடம் கம்பெனி தவறாது செலுத்தி வருகிறது.
2) கடன் பத்திரங்கள் மற்றும் அதற்கான வட்டி : எதுவுமில்லை.
3) வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் அதற்கான வட்டி : எதுவுமில்லை

2. டெபாசிட் திட்டம் பற்றிய விவரங்கள்

அ. இயக்குநர்கள் குழுவின் தீர்மானம் நிறைவேறிய நாள் : 18.05.2018.

ஆ. டெபாசிட் வரவேற்பது தொடர்பாக பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறிய நாள் : 25.09.2015 (ஆண்டு பொதுக்குழுக்கூட்டம்)

இ. டெபாசிட்டுகளின் தன்மை அதாவது ஈடு செய்யப்பட்டதா அல்லது ஈடுசெய்யப்படாததா : ஈடு செய்யப்படாத டெபாசிட்டுகள்.

ஈ. கம்பெனிகள் சட்டம் மற்றும் விதிமுறைகளின் படி டெபாசிட்டுகளின் மூலம் கம்பெனி திரட்டக்கூடிய தொகை மற்றும் முடிந்த நிதியாண்டின் கடைசி தினத்தன்று மற்றும் சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிட்ட தேதியன்று கம்பெனி வைத்திருந்த டெபாசிட் தொகை மற்றும் திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள டெபாசிட் தொகை மற்றும் அடுத்த 12 மாதங்களில் திருப்பித்தர வேண்டிய டெபாசிட் தொகை : கம்பெனிகள் சட்டம் 2013 மற்றும் விதிகளின் படி டெபாசிட்டுகளின் மூலம் கம்பெனி திரட்டக் கூடிய தொகை விவரம் : (ரூ. லட்சத்தில்)

1) பங்குதாரர்களிடமிருந்து :		
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம், ஃப்ரீ ரிசர்வ்கள் மற்றும் பங்குகள் உயர்மதிப்பு கணக்கு தொகை இவைகளின் கூட்டு தொகையில் 10%	:	5044.14
2) இதர டெபாசிட்டுகள் :		
செலுத்தப்பட்ட பங்கு மூலதனம், ஃப்ரீ ரிசர்வ்கள் மற்றும் பங்குகள் உயர்மதிப்பு கணக்கு தொகை இவைகளின் கூட்டு தொகையில் 25%	:	12610.36
மொத்தம்		17654.50
- 31.03.2018 அன்று கம்பெனி வைத்திருந்த டெபாசிட்டுகளின் மொத்த தொகை	:	4931.95
- சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிட்ட தேதியன்று கம்பெனி வைத்திருந்த டெபாசிட்டுகளின் தொகை	:	4382.90
- திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள டெபாசிட்டுகளின் தொகை	:	17654.50
- அடுத்த 12 மாதங்களில் திருப்பி செலுத்த வேண்டிய டெபாசிட்டுகளின் தொகை	:	2046.50

உ. டெபாசிட்டுகளை திரட்டுவதற்கான நிபந்தனைகள் : காலம், வட்டி விகிதம், வழங்கும் மற்றும் திருப்பி வழங்கும் முறை:

கால வைப்பு டெபாசிட் (காலாண்டுக்கான வட்டி வழங்குதல்)		
காலம்	**வருட வட்டி விகிதம்**	**குறைந்தபட்ச டெபாசிட் தொகை ரூ.**
1 வருடம்	8.00%	25,000/-
2 வருடங்கள்	8.25%	25,000/-
3 வருடங்கள்	8.35%	25,000/-

மூத்த குடிமக்கள் (60 வயதுக்கு மேல்), ஊழியர்கள், பங்குதாரர்கள் மற்றும் ரூ.5 லட்சம் மற்றும் அதற்கு மேலாக டெபாசிட் செய்பவர்களுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (அதிகபட்சம் 0.50% வருடத்திற்கு)
டெபாசிட்டுகளை திருப்பி வழங்கும் முறை : NEFT / RTGS மற்றும் காசோலை மூலமாக டெபாசிட்டுகள் திருப்பி வழங்கப்படும்.

ஊ. டெபாசிட் திட்டம் ஆரம்பிக்கப்படும் நாள் மற்றும் இந்த சுற்றிக்கை அல்லது விளம்பரம் எத்தனை நாட்கள் அமலில் இருக்கும் என்பது பற்றிய கால அட்டவணை: ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு, 2018ம் வருடத்திய வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெற்ற தேதிக்கு பின்வரும் நாளில் டெபாசிட் திட்டம் ஆரம்பிக்கப்படும். 2018-19 நிதியாண்டின் முடிந்த தேதியிலிருந்து 6 மாதங்கள் முடியும் வரை அல்லது 2019ம் வருடத்திய வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் தேதி வரை, இவற்றில் எது முதலில் வருகிறதோ அந்த தேதி வரை சுற்றறிக்கை நடைமுறையில் இருக்கும்.

எ. டெபாசிட்டுகளை ஏற்கும் காரணம் அல்லது நோக்கம்:
தொழில் நடவடிக்கைகளுக்கு துணை புரிய

ஏ. பெற்றுள்ள கடன் மதிப்பீட்டு சான்றிதழ் :

1)	கடன் மதிப்பீட்டு ஏஜென்சியின் பெயர்	:	கிரிஸில் லிமிடெட் (CRISIL Limited)
2)	பெற்றுள்ள கடன் மதிப்பீட்டு சான்றிதழ்	:	எப்ஏஏ - / நிலையானது (FAA-/Stable)
3)	சான்றிதழின் பொருள்	:	பாதுகாப்பானது. வட்டி மற்றும் அசலை திருப்பித் தருவதற்கு தேவையான வலிமையுடன் உள்ளது.
4)	சான்றிதழ் பெற்ற நாள்	:	08.05.2017

ஐ. டெபாசிட் காப்பீடு விவரம்^
காப்பீட்டு நிறுவனத்தின் பெயர், காப்பீட்டின் நிபந்தனைகள் காப்பீட்டுக் காலம், காப்பீட்டின் அளவு, பணம் செலுத்த தவறினால் திரும்ப கோரும் வழிமுறைகள் : கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகம் நிறுவனங்கள் டெபாசிட்டுகளை காப்பீடு இன்றி 31.3.2018ம் தேதி வரை அல்லது டெபாசிட் காப்பீடு கிடைக்கும் வரை, இவற்றில் எது முதலில் வருகிறதோ அது வரை பெற்றுக் கொள்ளலாம் என விளக்கு அளித்துள்ளது. கம்பெனி டெபாசிட் காப்பீடு கிடைக்காத காரணத்தால் டெபாசிட்டுகள் ஏற்பதை நிறுத்தி வைத்துள்ளது. இந்நிலையில் டெபாசிட் காப்பீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை கம்பெனிகள் சட்டத்திலிருந்து விடுப்பட்டுள்ளது. இத்திருத்தம் எப்போது கம்பெனிகள் சட்டத்தில் செயலுக்கு வருகிறதோ உடனே கம்பெனி டெபாசிட்டுகளை ஏற்றுக்கொள்ள தொடங்கும்.

ஒ. டெபாசிட்டுகளை பெற ஏதேனும் ஈடு செய்யப்பட்டிருந்தால் அல்லது திட்டமிடப்பட்டிருந்தால் அவை பற்றிய விவரம் : பொருந்தாது

ஓ. அவ்வாறு பெறப்படும் டெபாசிட்டுகளில் கம்பெனியின் இயக்குநர்கள், புரமோட்டர்கள் அல்லது முக்கிய பதவியில் உள்ள நிர்வாகத்தினர் ஆகியவர்களில் எவருக்கேனும் நிதிசார்ந்த அல்லது வேறு விதமான ஆதாயம் இருந்தால், அதைப் பற்றிய விவரங்கள், பிறரிடமிருந்து அத்தகைய ஆதாயம் வேறுபடும் விவரங்கள் : எதுவும் இல்லை

3. நிலுவையில் உள்ள டெபாசிட்டுகள் பற்றிய விவரங்கள் :

அ. நிலுவை தொகை : 31 .03.2018 அன்று ரூ.4938.45 லட்சம்
ஆ. டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் : 31.03.2018 அன்று அதற்கு முன்பாக
இ. ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த தொகை : ரூ.4938.45 லட்சம் (ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது இன்னும் நிலுவையில் உள்ள தொகை)

ஈ. வட்டி விகிதம் (வருடத்திற்கு)

காலம்	1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்
01.09.2017 முதல் 31.03.2018 வரை	8.00%	8.25%	8.35%
20.09.2016 முதல் 31.08.2017 வரை	8.50%	8.75%	9.00%
19.09.2016 வரை	9.00%	9.25%	9.50%

மூத்த குடிமக்கள் (60 வயதுக்கு மேல்), ஊழியர்கள், பங்குதாரர்கள் ரூ.5 லட்சம் மற்றும் அதற்கு மேலாக டெபாசிட் செய்தவர்களுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (அதிகபட்சம் 0.50% வருடத்திற்கு)

உ. டெபாசிட்டுதாரர்களின் எண்ணிக்கை : 4147

ஊ. டெபாசிட்டுக்களை திருப்பி வழங்குவதிலும், வட்டி வழங்குவதிலும் தவறியிருந்தால், டெபாசிட்தாரர்களின் எண்ணிக்கை, தொகை மற்றும் காலம் பற்றிய விவரம் : எதுவும் இல்லை

எ. டெபாசிட்தாரர்கள், டெபாசிட்டுகள் மீதான வட்டியை விலக்களித்தல் : பொருந்தாது

4. கம்பெனியின் நிதி நிலைமை

அ. சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடப்படும் நாளுக்கு முன் மூன்று நிதியாண்டுகளுக்கான வரி ஒதுக்கீட்டுக்கு முன்னும் பின்னும் கம்பெனியின் இலாபம் : ரூ.லட்சத்தில்

முடிவடைந்த நிதியாண்டு	வரிக்கு முந்தைய லாபம்	வரிக்கு பின் இலாபம்
31.3.2016	6640.30	4847.81
31.3.2017	8211.95	6014.47
31.3.2018	8763.28	5796.14

ஆ. மேற்குறிப்பிட்ட மூன்று நிதியாண்டுகளில் கம்பெனி அறிவித்த டிவிடெண்ட், கடந்த மூன்று நிதியாண்டுகளுக்கான வட்டி எல்லை விகிதம் (வரி மற்றும் செலுத்திய வட்டி சேர்த்து அல்லது செலுத்திய வட்டிக்கு பின் உள்ள பணஇலாபம்)

முடிவடைந்த நிதியாண்டு	சமபங்கு மீதுதான டிவிடெண்ட்		வட்டி எல்லை விகிதம்
	(%)	ரூ.லட்சத்தில்	
31.3.2016	400%	993.22	3.69
31.3.2017	450%	1117.38	4.41
31.3.2018	450%	1117.38	4.63

நிதியாண்டு 2015-16; 2016-17 மற்றும் 2017-18க்கு முறையே டிவிடெண்ட் விநியோக வரி நீங்கலாக ரூ.202.20 இலட்சம்; ரூ.227.48 லட்சம் மற்றும் ரூ.227.48 இலட்சம்.

இ. இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடுவதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக்குறிப்பின்படி கம்பெனியின் சுருக்கமான நிதி நிலைமை: (ரூ.லட்சத்தில்)

பங்கு மற்றும் பொறுப்புகள்	31.3.2018 அன்று	31.3.2017 அன்று #	31.3.2016 அன்று #	சொத்துகள்	31.3.2018 அன்று	31.3.2017 அன்று #	31.3.2016 அன்று #
சமநிலை பங்கு மூலதனம்	248.31	248.31	248.31	சொத்து ஆலை மற்றும் உபகரணம்	28975.87	28648.48	29603.18
சமநிலை பங்கு அல்லாதவை	54151.43	49078.23	41563.96	வேலை முன்னேற்றத்துக்கான மூலதனம்	878.53	574.07	277.32
நடப்பில் இல்லா பொறுப்புகள்				முதலீட்டுச் சொத்து	10.64	10.76	10.88
-நிதி பொறுப்புகள்	23103.00	19313.62	20215.94	தொட்டறிய முடியாத சொத்துகள்	119.69	160.33	182.22
-மற்றவைகள்	2732.06	2654.22	2647.81	வளர்ச்சியின் கீழ் உள்ள தொட்டறிய முடியாத சொத்துக்கள்	6.20	4.08	2.86
நடப்பில் உள்ள பொறுப்புகள்				நடப்பில் இல்லா சொத்துக்கள்			
-நிதி பொறுப்புகள்	22433.78	19159.34	22700.83	-நிதி சொத்துக்கள்	46091.78	38690.98	36203.78
- மற்றவைகள்	1181.47	948.04	868.72	-மற்றவைகள்	568.90	583.17	886.97
				நடப்பில் உள்ள சொத்துக்கள்			
				-நிதி சொத்துக்கள்	13063.76	11377.10	11831.73
				-மற்றவைகள்	14134.68	11352.79	9246.63
மொத்தம்	103850.05	91401.76	88245.57	மொத்தம்	103850.05	91401.76	88245.57

# முந்தைய ஆண்டு எண்கள், எங்கெங்கு தேவையோ அங்கங்கு மறுவகைப் படுத்தப்பட்டுள்ளன / ஒன்றுப்படுத்தப்பட்டுள்ளன / புதுவடிவில் வார்த்துருவாக்கப்பட்டுள்ளன.

ஈ இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடுவதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின் படி பணப்புழக்க விவரம் (ரூ.லட்சத்தில்)

பணப்புழக்க ஆதாரம்:	2017-18	2016-17	2015-16
செயல்வகை நடவடிக்கைகள்	7551.78	8569.25	10854.30
முதலீட்டு நடவடிக்கைகள்	(11616.33)	20005.35	(5999.64)
நிதிவிவகார நடவடிக்கைகள்	4056.28	(28543.15)	(4953.22)
பணம் அல்லது பணத்திற்கு ஈடான மதிப்பின் நிகர உயர்வு / (குறைவு)	(8.27)	(31.45)	(98.56)

உ கடந்த மூன்று ஆண்டுகளில் கம்பெனியின் கணக்கியல் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம், அதனால் கம்பெனியின் இலாபங்கள் மற்றும் ரிசர்வுகள் மீது ஏற்பட்ட மாற்றம் : நிதி அறிக்கைகள் இந்திய கணக்கியல் தரநிலைக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளன. அனைத்து கணக்கியல் கொள்கைகளும் மற்றும் பொருந்துகிற இந்திய கணக்கியல் தரநிலைகளும் வழங்கப்பட்டுள்ள அனைத்து காலமும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

5. இயக்குநர்களின் அறிக்கை -

அ. இக்கம்பெனி,கம்பெனி சட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ ஏற்றுக் கொள்ளப்பட்ட டெபாசிட்டுக்களை திருப்பி அளிப்பதிலோ அதற்கான வட்டி வழங்குவதிலோ இதுவரை தவறியதில்லை.

ஆ. இயக்குநர்களின் குழு, கம்பெனியின் நடவடிக்கைகள் மற்றும் அதன் வளமான வாய்ப்புகள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளது. கம்பெனியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால நிதிநிலையின்படி கம்பெனி தனது கடன்களை செலுத்த வேண்டிய நேரத்தில் சரியாக செலுத்தும் என்றும் இந்த சுற்றறிக்கை அல்லது விளம்பரம் வெளியிடும் தேதியில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் கம்பெனி திவாலாகாமல் நல்ல நிலைமையில் இருக்குமென இயக்குநர்களின் குழு கருதுகிறது;

இ. இந்த கம்பெனி, கம்பெனி சட்டம் மற்றும் விதிகளுக்கு உட்பட்டு செயல்படுகிறது;

ஈ. இந்த கம்பெனி, கம்பெனி சட்டம் மற்றும் விதிகளின்படி செயல்படுவதால் டெபாசிட்டுக்களை திருப்பி கொடுப்பதற்கு மத்திய அரசினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டது என்று பொருள் கொள்ள கூடாது;

உ. இக்கம்பெனி, கம்பெனி சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன் பெற்றிருந்த டெபாசிட்டுக்களுக்கு முறையாக பணத்தை செலுத்தி வருகிறது. (அல்லது டெபாசிட்டுக்கள் முதிர்வடையும் போது அதை வட்டியுடன் திருப்பி செலுத்தும். டெபாசிட்டுக்களை திருப்பி கொடுக்கும் வரை அவை ஈடு செய்யப்படாதது என்றும் கம்பெனியின் ஈடு செய்யப்படாத கடன்களுக்கு இணையானதாகவும் கருதப்படும்);

ஊ. கடன் மதிப்பீட்டு தரவரிசையில் ஏதேனும் பாதகமான மாற்றமிருந்தால் முதலீட்டாளர்கள் தங்கள் பணத்தை அபராதம் இன்றி திரும்ப பெற வாய்ப்பளிக்கப்படும்;

எ. இந்த சுற்றறிக்கை அல்லது டெபாசிட்டுகளை வரவேற்கும் விளம்பர வடிவிலான சுற்றறிக்கையில் உள்ளபடி பெறப்பட்ட டெபாசிட்டுகள் பயன்படுத்தப்படும்;

ஏ. கம்பெனி பெற்ற டெபாசிட்டுக்கள் திருப்பி கொடுக்கும் வரை அவை ஈடு செய்யப்படாததாகவும் நிறுவனத்தின் இதர ஈடு செய்யப்படாத கடன்களுக்கு இணையானதாக கருதப்படும்.

6. பொறுப்பாகாமை^

பொறுப்பாகாமை^ : சுற்றறிக்கை அல்லது விளம்பர வடிவிலான சுற்றறிக்கையை கம்பெனி பதிவாளரிடம் சமர்பிப்பது அந்த சுற்றறிக்கையை கம்பெனி பதிவாளர் அல்லது மத்திய அரசு அனுமதித்தது அல்லது அங்கீகரித்தது என்று அர்த்தமாகாது என்பதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். சுற்றறிக்கை அல்லது விளம்பர வடிவிலான சுற்றறிக்கையில டெபாசிட்டுக்களை பெறுவதற்காக அல்லது வரவேற்பதற்காக டெபாசிட் திட்டத்தில் நிதிநிலைமையை பற்றி கொடுத்துள்ள அறிக்கை அல்லது கூற்று சரியானவை என்று கம்பெனி பதிவாளாரோ அல்லது மத்திய அரசோ பொறுப்பு ஏற்காது. டெபாசிட்டாளர்கள் டெபாசிட் செய்வதற்கு முன் டெபாசிட் திட்டத்தை பற்றி முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த விளம்பரம் வடிவிலான சுற்றறிக்கையில் உள்ள வாசகமானது 18 மே 2018 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு, அவ்வாறு அங்கீகாரம் வழங்கிய போது இருந்த பெரும்பான்மை இயக்குநர்களால் இவ்விளம்பரம் வடிவிலான சுற்றறிக்கை கையொப்பமிடப்பட்டது. இவ்விளம்பரம் இயக்குநர் குழுவின் உத்திரவின்படி அவர்கள் சார்பாக வெளியிடப்படுகிறது.

சென்னை
12.9.2018

இயக்குநர் குழுவின் உத்தரவின்படி
ஜே. கே. ஃபென்னர் (இந்தியா) லிமிடெட்
ஆர். விஜயராகவன், கம்பெனி செயலாளர்

^ கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகத்தின் சுற்றறிக்கை தேதி 5 ஜீலை 2018-ல் விடுப்பட்டுள்ளது.

2018-ஆம் ஆண்டு 15ம் தேதி அமலுக்கு வந்த கம்பெனிகள் (டெபாசிட்டுகள் ஏற்பு) திருத்தப்பட்ட விதிகள் 2018-ஆம் ஆண்டு படி சட்டப்பூர்வ ஆடிட்டர் வழங்கிய சான்றிதழ்.

ஜே.கே. ஃபென்னர் (இந்தியா) லிமிடெட் கம்பெனி சட்டம் 2013 செயல்படுத்தப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ ஏற்றுக்கொண்ட டெபாசிட்டுக்களை திருப்பி அளிப்பதிலோ அல்லது அதற்கான வட்டி வழங்குவதிலோ இதுவரை தவறியதில்லை என நாங்கள் சான்றளிக்கிறோம்.

இடம் : நியூடெல்லி
தேதி : 10.8.2018

லோதா அண்டு கோ-வுக்காக
பட்டய கணக்காளர்கள்
நிறுவன பதிவு எண்: 301051 E
கௌரவ் லோதா
பார்ட்னர்
உறுப்பினர் எண்: 507462

J.K. Fenner
THE FRONT RUNNER

W 19 x H 46